## பிரதான விடயங்களடங்கிய ஆவணம்

CBC FINANCE

A Fully Owned Subsidiary of Commercial Bank of Ceylon PLC

கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பிஎல்சியின் முழுமையான துணை நிறுவனமாகும்

### ஒழுங்குமுறை இணக்கப்பாட்டு அறிவித்தல்

இவ்வாவணம், இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) வெளியிடப்பட்ட நிதி நுகர்வோர் பாதுகாப்புச் சட்டகத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள பொருந்தக்கூடிய தேவைகள் மற்றும் ஒழுங்குமுறை ஏற்பாடுகளுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளது. (2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கி வழிகாட்டுதல்கள் மற்றும் 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நிதி நுகர்வோர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள்) முக்கிய அம்சங்கள், தகைமைக்கான நிபந்தனைகள், கட்டணக் கட்டமைப்புகள், வட்டி கணக்கீட்டு முறைகள், ஒழுங்குமுறை ரீதியான வெளிப்படுத்தல்கள் மற்றும் வாடிக்கையாளர் முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டு பரிசீலித்து, அவற்றுக்குத் தீர்வு வழங்குவதற்கான நடைமுறைகள் உள்ளிட்ட முக்கிய தகவல்களை இது உள்ளடக்கியுள்ளது.

### சேமிப்புக் கணக்கு

| | |
|---|---|
| **இலக்குக் குழு மற்றும் தகைமை** | தனிநபர்களுக்கு / கூட்டுக்கணக்குவைப்பாளர்கள் (18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகள், இலங்கையில் வசிப்பவர்கள் மற்றும் இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள்), இலங்கையில் முறையாகப் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், தனியுடைமை வணிகங்கள், பங்குமைகள், கழகங்கள், சங்கங்கள் மற்றும் அறக்கட்டளைகள். |
| தேவைப்படும் பிரதான ஆவணங்கள் | • தனிநபர்களுக்கு: முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கணக்கு இயக்கல் ஆணைப் படிவம், செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை / சாரதி அனுமதிப்பத்திரம் / கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியிலிருந்து வேறுபட்ட முகவரியில் வசிப்பின், குறித்த முகவரியை உறுதிப்படுத்தும் ஆவணம், பணமோசடி தடுப்பு மற்றும் வாடிக்கையாளர் அறிதல் (KYC) விதிமுறைகளுக்கு அமைவாகத் தேவையான ஆவணங்கள்.<br>• நிறுவனங்கள் / நிறுவன அமைப்புகளுக்கு: வியாபாரப் பதிவுச் சான்றிதழ் (BR) / நிறுவனப் பதிவுச் சான்றிதழ், நிறுவனத்தின் யாப்பு/ சங்கத்தின் யாப்பு, பணிப்பாளர் சபைத் தீர்மானம், படிவம் 1 மற்றும் படிவம் 20 (அல்லது படிவம் 40), நிறுவன யாப்பு மற்றும் கூட்ட அறிக்கைகள், அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்களின் பட்டியல், நிறுவனத்திற்கான KYC ஆவணங்கள், நன்மைபெறும் உரிமையாளர் தொடர்பான பிரகடனம். |
| **பிரதான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** | • ஆரம்ப வைப்புத் தொகை: ரூ .1,000/-.<br>• குறைந்தபட்ச இருப்புத் தொகை: வட்டி ஈட்டுவதற்காக கணக்கில் குறைந்தபட்சம் ரூ .1,000/- இருப்புத் தொகை பேணப்பட வேண்டும்.<br>• வட்டி கணக்கீடு: நாளாந்த கணக்கு இறுதி இருப்புத் தொகையின் அடிப்படையில் வட்டி கணக்கிடப்பட்டு, மாதாந்தம் கணக்கில் வரவு வைக்கப்படும்.<br>• காசோலை வைப்புகள்: நிறுவன முகாமைத்துவத்தின் முழுமையான விருப்பத்திற்கமைவாக ஏற்றுக்கொள்ளப்படும்.<br>• கணக்கு அறிக்கைகள் மற்றும் வரிவிதிப்பு: கோரிக்கையின் பேரில் கணக்கு அறிக்கைகள் வழங்கப்படும். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் (IRD) அறிவுரைகளுக்கு அமைவாக நிறுத்திவைத்தல் வரி (WHT) அறவிடப்படும். |

**FIXED DEPOSIT**

| | |
|---|---|
| **இலக்குக் குழு மற்றும் தகைமை** | 18 வயதுக்கு மேற்பட்ட தனிநபர்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகள், (கூட்டுக் கணக்குகளுக்கு விசேட மூத்த பிரஜைகளுக்கான வட்டி விகிதம் வழங்கப்பட வேண்டுமாயின், குறித்த கணக்கின் அனைத்து உரிமையாளர்களும் மூத்த பிரஜைகளாக இருக்க வேண்டும்) முறையாகப் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் நிறுவன அமைப்புகள் தகுதியுடையவை. |
| **பிரதான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** | • குறைந்தபட்ச வைப்பு மற்றும் காலப்பகுதி:<br>குறைந்தபட்ச வைப்பு தொகை ரூ. 100,000/- ஆகும். வைப்புக் காலப்பகுதி 1 மாதம் முதல் 60 மாதங்கள் வரை அமையும்.<br>• வட்டி செலுத்தும் முறைகள்:<br>வட்டியானது மாதாந்தம், வருடாந்தம் அல்லது வைப்புக் காலப்பகுதி நிறைவடையும் போது செலுத்தப்படும்.<br>மாதாந்த வட்டி = (ஒப்புக்கொள்ளப்பட்ட வருடாந்த வட்டி விகிதம் (APR) ÷ 365) × குறித்த மாதத்திலுள்ள நாட்களின் எண்ணிக்கை.<br>• நிலையான வைப்பிற்கு எதிரான கடன் வசதி:<br>காலப்பகுதி நிறைவில் வட்டி பெறும் நிலையான வைப்புகளுக்கும், மாதாந்த வட்டி பெறும் நிலையான வைப்புகளுக்கும், வைப்புத் தொகையின் 90% வரை கடன் வசதி வழங்கப்படும்.<br>• முதிர்விற்கு முன்னர் வைப்பினை மீளப்பெறுதல்:<br>இலங்கை மத்திய வங்கியின் (CBSL) வழிகாட்டுதல்கள் மற்றும் நிறுவனத்தின் தண்டக் கட்டணக் கொள்கைகளுக்கு உட்பட்டு, நிலையான வைப்பை முதிர்விற்கு முன்னர் மீளப்பெறலாம். ஏற்கனவே மாதாந்தம் செலுத்தப்பட்டுள்ள அதிகப்படியான வட்டித் தொகை, அசல் வைப்பு மூலதனத் தொகையிலிருந்து மீளப்பெறப்படும். நிலையான வைப்பு சான்றிதழ் தொலைந்துவிட்டால், முதிர்விற்கு முன்னர் வைப்பினை மீளப்பெறுதல் அனுமதிக்கப்படமாட்டாது.<br>• வைப்புக் காப்புறுதி:<br>இவ்வைப்பு, இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்யப்பட்டதாகும். ஒரு வைப்பாளருக்கு அதிகபட்சமாக ரூ. 1,100,000/- வரையிலான இழப்பீடு வழங்கப்படும். |

## 2. கடன் வழங்கல் சேவைகள் மற்றும் கடன் வசதிகள்

### 1. குத்தகை

| | |
|---|---|
| **இலக்குச் சந்தை மற்றும் தகைமை** | தனிநபர் கடன்பெறுனர், தனியுடைமை வர்த்தகங்கள், பங்குடமைகள் மற்றும் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகள் இவ்வசதிக்குத் தகுதியுடையவர்களாவர். விண்ணப்பதாரர்கள் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்குள் உள்ள இலங்கைப் பிரஜைகளாகவோ அல்லது முறையாகப் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களாகவோ இருக்க வேண்டும். |
| **பிரதான தேவைப்பாடுகள்** | தேவையான துணை ஆவணங்களுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கடன் வசதி விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். வாகனப் பதிவுச் சான்றிதழ் (CR), விலைப்பட்டியல் மற்றும் விலைமதிப்பீட்டு அறிக்கை ஆகியவற்றுடன், இயந்திர இலக்கம் மற்றும் செஸி இலக்கம் ஆகியவற்றை ஒப்பிட்டு உறுதிப்படுத்துவதற்காக கடன் அதிகாரியினால் வாகனம் நேரடியாகப் பரிசோதிக்கப்படும். |
| **பிரதான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** | • அதிகபட்ச நிதியுதவிக் காலப்பகுதி:<br>புதிதாகத் தயாரிக்கப்பட்ட / பதிவு செய்யப்படாத வாகனங்கள்: அதிகபட்சம் 72 மாதங்கள் வரை.<br>ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட வாகனங்கள்: அதிகபட்சம் 60 மாதங்கள் வரை.<br><br>• நிதியுதவி வழங்கப்படும் வாகன வகைகள்:<br>மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வாகனங்கள், கார்கள், வேன்கள், ஜீப்புகள், டிரக்குகள், லொறிகள், பேருந்துகள், இரட்டை நோக்குப் பயன்பாட்டு வாகனங்கள் மற்றும் சிறப்புப் பயன்பாட்டு வாகனங்கள் ஆகியவற்றுக்கு நிதியுதவி வழங்கப்படலாம்.<br>• கடன்–பெறுமதி விகிதம் (LTV) மற்றும் அங்கீகாரம்: கடன்–பெறுமதி விகிதம் (Loan-to-Value – LTV), இலங்கை மத்திய வங்கியினால் அவ்வப்போது வெளியிடப்படும் பொருந்தக்கூடிய கட்டளைகள் மற்றும் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் நிறுவனத்தின் நடைமுறையிலுள்ள கடன் வழங்கல் வழிகாட்டுதல்கள் ஆகியவற்றுக்கு அமைவாக நிர்ணயிக்கப்படும். அனைத்து நிதியுதவி வசதிகளும் கடன் மதிப்பீடு நடைமுறைகளுக்கு உட்பட்டவையாகும்.<br>• கடன் தவறுதல் மற்றும் தாமதக் கட்டணங்கள்: ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தவணைத் தொகைகளை நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் செலுத்தத் தவறும் பட்சத்தில், குறித்த ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக தாமதக் கட்டணங்கள் மற்றும்/அல்லது தாமத வட்டி அறவிடப்படும். |

## 2. வாகனக் கடன்

| | |
|---|---|
| **இலக்குச் சந்தை மற்றும் தகைமை** | தனிநபர் கடனாளிகள், தனியுடைமை வர்த்தகங்கள், பங்குடமைகள் மற்றும் CBC பினான்ஸ் நிறுவனத்தின் கடன் வழங்கல் தரநிலைகளைப் பூர்த்தி செய்யும் நிறுவனங்கள் நிறுவன அமைப்புகள் இவ்வசதிக்குத் தகுதியுடையவர்களாவர் |

| | |
|---|---|
| **பிரதான தேவைப்பாடுகள்** | கடன் வசதி விண்ணப்பப் படிவம்; அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணம்; வருமானத்தை உறுதிப்படுத்தும் ஆவணம்; இயந்திரம் மற்றும் செஸி விபரங்களை உறுதிப்படுத்துவதற்கான வாகனத்தின் நேரடி பரிசோதனை. |
| **பிரதான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** | • கடன் காலப்பகுதி: குறைந்தபட்சம் 12 மாதங்கள் முதல் அதிகபட்சம் 60 மாதங்கள் வரை.<br>• அனுமதிக்கப்படும் வாகனங்கள்: மோட்டார் கார்கள், வேன்கள், ஜீப்கள், டபிள் கேப் வாகனங்கள் மற்றும் மினி ட்ரக்குகள்கள் மினி ட்ரக்கு இரட்டைப் பயன்பாட்டு வாகன வகையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்<br>• கடன்–பெறுமதி விகிதம் (LTV) மற்றும் அங்கீகாரம்: இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) வெளியிடப்படும் பொருந்தக்கூடிய பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு கண்டிப்பாக அமைவாக நிர்ணயிக்கப்படும். அனைத்து நிதியுதவி வசதிகளும் கடன் இடர் மதிப்பீட்டிற்கு உட்பட்டவையாகும். |

## 3. மோட்டார் டிராஃப்ட் கடன்

| | |
|---|---|
| **இலக்குச் சந்தை மற்றும் தகைமை** | குறுகியகால வாகனப் பிணையத்தை அடிப்படையாகக் கொண்ட நிதி வசதியை நாடும் தனிநபர்கள், தனியுடைமை வர்த்தகங்கள், பங்குடமைகள் மற்றும் நிறுவனங்கள் இவ்வசதிக்குத் தகுதியுடையவர்களாவர். |
| பிரதான தேவைப்பாடுகள் | கடன் வசதி விண்ணப்பப் படிவம்; வாகனப் பரிசோதனை அறிக்கை; வாகனப் பதிவுச் சான்றிதழ் (CR) விலை மதிப்பீட்டு அறிக்கை; விலைப்பட்டியல் மற்றும் தொடர்புடைய ஆவணங்களின் சரிபார்ப்பு. |
| **பிரதான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** | • கடன் காலப்பகுதி: அதிகபட்சம் 12 மாதங்கள் வரையான குறுகியகால நிதி வசதி.<br>• அனுமதிக்கப்படும் வாகனங்கள்: மோட்டார் கார்கள், வேன்கள், SUV வாகனங்கள் மற்றும் டபிள் கேப் வாகனங்கள்.<br>• அனுமதி மற்றும் கட்டணங்கள்: அனைத்து அனுமதிகளும் CBC Finance நிறுவனத்தின் முழுமையான விருப்பத்திற்கமைவாக வழங்கப்படும் வெளியிடப்பட்ட கட்டண அட்டவணைக்கு அமைவாக ஆவணக் கட்டணங்கள் அறவிடப்படும் |

## 4. ஹைப்ரிட் கடன்

| | |
|---|---|
| **கட்டமைப்பு மற்றும் இலக்குச் சந்தை** | தனிநபர் கடனாளிகள், தனியுடைமை வர்த்தகங்கள், பங்குடமைகள் மற்றும் நிறுவனங்களுக்காக, வாகனக் கடன் வசதி மற்றும் மோட்டார் டிராஃப்ட் கடன் வசதி ஆகிய இரு கடன் கூறுகளையும் ஒருங்கிணைத்து ஒரே நிதி வசதியாக வழங்கும் முறையாகும். |
| **கடன் காலப்பகுதி விவரம்** | • வாகனக் கடன் கூறு: அதிகபட்சம் 5 ஆண்டுகள் (60 மாதங்கள்)<br>• மோட்டார் டிராஃப்ட் கடன் கூறு: அதிகபட்சம் 12 மாதங்கள். |
| **பிரதான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** | • அனுமதிக்கப்படும் வாகனங்கள்: மோட்டார் கார்கள், வேன்கள், ஜீப்கள், டபிள் கேப் வாகனங்கள் மற்றும் இரட்டைப் பயன்பாட்டு வாகனங்கள்.<br>• LTV வழிகாட்டுதல்கள்: இரு கடன் கூறுகளுக்குமான LTV விகிதங்கள் இலங்கை மத்திய வங்கியின் உத்தரவுகள் மற்றும் CBCF நிறுவனத்தின் நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல்களுக்கு கண்டிப்பாக அமைவாக இருக்கும். |

## 5. நிலையான வைப்பு பிணையக் கடன்

| | |
|---|---|
| **இலக்குச் சந்தை மற்றும் தகைமை** | CBC பினான்ஸ் நிறுவனத்தில் செயலில் உள்ள நிலையான வைப்பு ஒன்றைக் கொண்டிருக்கும் தனிநபர்கள், கூட்டுக் கணக்கு உரிமையாளர்கள் அல்லது நிறுவனங்கள் .நிறுவன அமைப்புகள் இவ்வசதிக்குத் தகுதியுடையவர்களாவர் / |
| **கடன் தொகை மற்றும் திருப்பிச் செலுத்தும் காலப்பகுதி** | • கடன் தொகை: நிலையான வைப்பின் மதிப்பில் அதிகபட்சம் 90% வரை; குறைந்தபட்சம் ரூ .25,000/-.<br>• கடன் காலப்பகுதி: கடன் வசதியின் காலப்பகுதி, குறித்த நிலையான வைப்பின் மீதமுள்ள முதிர்வுக் காலப்பகுதியை எந்தவிதத்திலும் மீறக்கூடாது. |
| **பிரதான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** | • வட்டி விகிதம்: சொத்துகள் மற்றும் பொறுப்புகள் குழு (ALCO) வழங்கும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக FD AER + நிர்ணயிக்கப்பட்ட விளிம்பு என்ற அடிப்படையில் அறவிடப்படும்.<br>• ஆவணக் கட்டணம்: ரூ .1,500/- முதல். |

## 6. தங்கக் கடன்

| | |
|---|---|
| **இலக்குச் சந்தை மற்றும் செயன்முறை** | சில்லறைத் தங்க வாடிக்கையாளர்கள், தங்க நகை வியாபாரிகள், அடகு வியாபாரிகள் மற்றும் தங்க நகை உற்பத்தியாளர்கள் இவ்வசதியின் இலக்குக் குழுவாக உள்ளனர். வாடிக்கையாளர் தங்கப் பொருளை கிளையில் சமர்ப்பித்தல் → மதிப்பீட்டாளரினால் தங்கத்தின் தூய்மை மற்றும் தரம் பரிசோதிக்கப்படுதல் → வழங்கக்கூடிய முன்பண எல்லை கணக்கிடப்படுதல் → கணினி முறைமையின் மூலம் அடகு சீட்டு அச்சிடப்படுதல் → காசாளரினால் பணம் வழங்கப்படுதல். |
| **தேவையான ஆவணங்கள்** | செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதியுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட KYC படிவம் மற்றும் இழப்பீட்டு நட்டஈட /ுப் பொறுப்பு அறிக்கை. |
| **பிரதான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** | • கிடைக்கப்பெறும் காலப்பகுதிகள்: 1 மாதம், 3 மாதங்கள், 6 மாதங்கள் மற்றும் 12 மாதங்கள்.<br>• மீட்டல் மற்றும் கொடுப்பனவு தவறுதல்: அசல் தொகையும் அதற்குரிய வட்டியும் முழுமையாகச் செலுத்தப்பட்ட பின்னர் அடகு வைக்கப்பட்ட தங்கப் பொருளை மீட்டுக்கொள்ள முடியும்கொடுப்பனவு தவறினால் . மேலதிக வட்டி அறவிடப்பட்டு, அடகு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஏல விற்பனை மேற்கொள்ளப்படும்.<br>• இழப்பீடு: அடகு வைக்கப்பட்ட பொருள் தொலைந்து போகும் சந்தர்ப்பத்தில், CBCF நிறுவனத்தினால் வழங்கப்படும் இழப்பீடு அப்போதைய நடைமுறைச் சந்தை மதிப்பிற்கு மட்டுப்படுத்தப்படும். |

## 3.கட்டண விகிதங்கள் மற்றும் கடன் வட்டி விகிதங்கள்

| பொருள் / சேவை வகை | Facility Tier | ஆவணக் கட்டணம் | வட்டி வீதங்கள் (வருடத்திற்கு) |
|---|---|---|---|
| **வாகனக் கடன் / மோட்டார் டிராஃப்ட் / குத்தகை நிதியுதவி** | ஏதேனும் வசதித் தொகை | Rs. 4,500/- முதல் | 17.00% முதல் |
| **நுண் குத்தகை நிதியுதவி (இருசக்கர வாகனம்)** | ஏதேனும் வசதித் தொகை | Rs. 6,200/- முதல் | 24.00% முதல் |
| **நுண் குத்தகை நிதியுதவி (முச்சக்கர வாகனம்)** | ஏதேனும் வசதித் தொகை | Rs. 6,200/- முதல் | 23.00% முதல் |
| **பண வைப்பு உத்தரவாதக் கடன்** | ஏதேனும் வசதித் தொகை | Rs. 1,500/- முதல் | நிலையான வைப்பின் வருடாந்த சமமான வட்டி விகிதம் + ALCO வழங்கும் அறிவுறுத்தலின்படியான விளிம்பு.<br>* ஏதேனும் விலகல் மேற்கொள்ளப்படுவது உரிய அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும். |
| **தங்கக் கடன் (1 மாதம்)** | முன்பண அடிப்படையில் | ஒவ்வொரு முன்பணத்திற்கும் 0.50% | வருடத்திற்கு 23.16% . |
| **தங்கக் கடன் (3/6 மாதங்கள்)** | முன்பண அடிப்படையில் | ஒவ்வொரு முன்பணத்திற்கும் 0.50% | வருடத்திற்கு 19.20% |
| **தங்கக் கடன் (1 மாதம்) (12 மாதங்கள்)** | முன்பண அடிப்படையில் | பொருந்தாது | வருடத்திற்கு 19.20% |

** **குறிப்பு:** நிலவும் சந்தை நிலைமைகளின் அடிப்படையில் வட்டி விகிதங்கள் மாற்றமடையக்கூடும்

## 4. தண்ட வட்டி மற்றும் தாமதக் கட்டணங்கள் கணக்கீட்டு முறை

**இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறை இணக்கப்பாட்டு உத்தரவு** (குறிப்பு இலக்கம்: 24/01/015/0004/026)

இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) வெளியிடப்பட்டுள்ள தண்டனை வட்டி விகிதங்கள் தொடர்பான ஒழுங்குமுறை உத்தரவுகளுக்கு இணங்க, கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் நிறுவனம் தண்டனைக் கட்டணங்களை, உண்மையில் ஏற்பட்டுள்ள தாமதக் காலப்பகுதிக்குரிய நிலுவையிலுள்ள தவணைத் தொகையின் மீது மட்டுமே கணக்கிடும். மேலும், இத்தண்டனைக் கட்டணங்களின் அறவீட்டின் மூலம் நிதி நுகர்வோருக்கு தேவையற்ற மேலதிகக் கடன் சுமை ஏற்படாதிருப்பது உறுதிசெய்யப்படும்.

| நியம தண்ட வட்டி கணக்கீட்டு முறைமை | |
|---|---|
| **இலங்கை மத்திய வங்கியினால் கட்டளையிடப்பட்ட சூத்திரம்** | தண்ட வட்டி = (மொத்த நிலுவையிலுள்ள தவணைத் தொகை) × (பொருந்தும் வருடாந்த தண்ட வட்டி விகிதம்) × (தாமதமான நாட்களின் எண்ணிக்கை / 365) |
| **கணக்கீட்டிற்கான அடிப்படை** | தண்ட வட்டி, நிலுவையில் காணப்படும் மொத்தத் தவணைத் தொகையின் மீது மட்டுமே, கண்டிப்பான முறையில் கணக்கிடப்படும். |
| **சலுகைக் காலம்** | ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள செலுத்த வேண்டிய திகதியிலிருந்து ஐந்து (5) வணிக நாட்கள் கொண்ட சலுகைக் காலம் வழங்கப்படும். இச்சலுகைக் காலம் நிறைவடைந்த பின்னரே தண்ட வட்டி கணக்கிடப்படத் தொடங்கும். |

| பொருள் / சேவை விபரம் | தண்ட வட்டி வீதம் | கணக்கீட்டிற்கான அடிப்படை |
|---|---|---|
| **குத்தகை நிதியுதவி** | **மாதாந்தம் 4.00% . (48% வருடாந்தம்)** | நிலுவையில் உள்ள தாமதமான குத்தகைத் தவணைத் தொகையின் மீது மட்டுமே கணக்கிடப்படும். |
| **குத்தகை நிதியுதவி – 2 சக்கர / 3 சக்கர வாகனங்கள்** | **மாதாந்தம் 4.00% . (48% வருடாந்தம்)** | நிலுவையில் உள்ள தாமதமான குத்தகைத் தவணைத் தொகையின் மீது மட்டுமே கணக்கிடப்படும். |
| மோட்டார் டிராஃப்ட் | **மாதாந்தம் 4.00% (48% வருடாந்தம்)** | நிலுவையில் உள்ள தாமதமான குத்தகைத் தவணைத் தொகையின் மீது மட்டுமே கணக்கிடப்படும். |
| **CBC வாகனக் கடன்** | **மாதாந்தம் 4.00% (48% வருடாந்தம்)** | நிலுவையில் உள்ள தாமதமான குத்தகைத் தவணைத் தொகையின் மீது மட்டுமே கணக்கிடப்படும். |
| **நிலையான வைப்பு பிணையக் கடன்** | **மாதாந்தம் 4.00% (48% வருடாந்தம்)** | நிலுவையிலுள்ள வட்டி / அசல் தொகைக் கூறின் மீது கணக்கிடப்படும். |
| **தங்கக் கடன் / பணியாளர் தங்கக் கடன்** | **மாதாந்தம் 0.75% p.m. (9% வருடாந்தம்)** | நிலுவையில் உள்ள அசல் தொகையின் மீது கணக்கிடப்படும். |

## 5. பொதுவான நிபந்தனைகள், சட்ட ஏற்பாடுகள் மற்றும் வெளிப்படுத்தல்கள்

### நிதி உற்பத்திகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் கூட்டு வைப்புக்கள்

| | |
|---|---|
| **சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை** | வாடிக்கையாளர்கள் எந்தவொரு கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் கிளைக்கும் நேரடியாகச் சென்று அல்லது தொடர்புகொண்டு சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். (கிளைகளின் தொடர்பு விபரங்களை www.cbcfinance.lk மூலம் பெற்றுக்கொள்ளலாம்.) முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள், தேவையான அனைத்து துல்லியமான மற்றும் உரிய துணை ஆவணங்களுடன், மதிப்பீட்டிற்காக கிளை அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| **கூட்டு வைப்புக்களது செயற்பாடுகள்** | கூட்டுத் வைப்புகளில் வைப்பாளர்களில் ஒருவர் மரணமடைந்தால், CBC பினான்ஸ் நிறுவனத்திற்கு உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும். எஞ்சியுள்ள வைப்பாளர், நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக, வைப்புத் தொகையின் நிலுவைத் தொகையில் சட்டரீதியான உரிமை கொண்ட ஒரே நபராக அங்கீகரிக்கப்படுவார். |

### வட்டி விகிதக் கொள்கை மற்றும் கடன் மீட்பு நடைமுறைகள்

| | |
|---|---|
| **வட்டி விகித நிர்ணயம்** | கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் நிறுவனத்தின் வட்டி விகிதங்கள், பொருந்தக்கூடிய ஒழுங்குமுறைச் சட்டகங்களின் கீழ், சொத்துகள் மற்றும் பொறுப்புகள் குழுவின் (ALCO) கொள்கைகளுக்கு அமைவாக நிர்ணயிக்கப்படும். வைப்புகளுக்கான நடைமுறை வட்டி விகிதங்கள் நிறுவனத்தின் கிளைகளிலும் www.cbcfinance.lk காட்சிப்படுத்தப்படும். கடன் வழங்கலுக்கான வட்டி விகிதங்களானது, வழங்கப்படும் நிதி வசதியின் வகை, கடன் காலப்பகுதி மற்றும் பிணையத்தின் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். மேலும், நிலவும் சந்தை நிலைமைகளுக்கு அமைவாகவும் அவை அவ்வப்போது திருத்தப்படலாம். |
| **கடன் மீட்பு மற்றும் மறுசீரமைப்பு** | வாடிக்கையாளரின் பணப்புழக்க நிலைமையை மதிப்பீடு செய்ததன் அடிப்படையில், கடன் வசதிகளை மீள அட்டவணைப்படுத்துதல் அல்லது மறுசீரமைத்தல் மூலம் கடன் தொகையை மீளச் செலுத்துவதற்கு கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் நிறுவனம் இயன்றளவு வசதிகளை ஏற்படுத்தும். எனினும், கடன் மீளச் செலுத்தலில் தவறுதல் தொடர்ந்து நீடிக்கும் பட்சத்தில், ஒப்பந்தத்தின் கீழ் நிறுவனத்திற்குக் காணப்படும் உரிமைகள் மற்றும் இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக கடன் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அத்தகைய நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அனைத்து சட்டரீதியான செலவுகளும் மற்றும் கடன் மீட்புச் செலவுகளும் வாடிக்கையாளரால் ஏற்கப்பட வேண்டும். இருப்பினும், சட்டரீதியான நிவாரணத்தை நாடுவதற்கான உரிமை வாடிக்கையாளருக்கு தொடர்ந்து உண்டு. |

## சட்டப்பூர்வ வெளிப்படுத்தல்கள் மற்றும் சட்ட ஏற்பாடுகள்

| | |
|---|---|
| **பொருந்தக்கூடிய சட்டங்கள்** | வழங்கப்படும் நிதி வசதிகள் மற்றும் சேவைகள் பின்வரும் சட்டங்கள் மற்றும் இலங்கையில் பொருந்தக்கூடிய ஏனைய சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக நிர்வகிக்கப்படும்: 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம் ,2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டம் ,1949 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க அடகு சட்டம் (திருத்தங்களுடன்), 1990 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கடன் மீட்புச் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிப் பரிவர்த்தனை அறிக்கையிடல் சட்டம், சிவில் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை, மற்றும் இலங்கையில் பொருந்தக்கூடிய ஏனைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள். |
| **இரகசியத்தன்மை மற்றும் அறிக்கையிடல்** | 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 61(2) ஆம் பிரிவின் கீழ், வாடிக்கையாளர் தகவல்கள் தொடர்பில் கடுமையான இரகசியத்தன்மை பேணப்படும். இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) ஒழுங்குபடுத்தப்படும் நிதி நிறுவனமாக, கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் நிறுவனம் சட்டரீதியான தேவைகளுக்கு அமைவாக, முன்கூட்டிய அறிவித்தல் இன்றியே இலங்கை மத்திய வங்கிக்கும் சட்டபூர்வமான அதிகாரம் கொண்ட நிறுவனங்களுக்கும் தேவையான தகவல்களை வழங்கக் கடமைப்பட்டுள்ளது. கடன் வழங்கல் தொடர்பான விபரங்கள் வழமையாக இலங்கை கடன் தகவல் பணியகத்திற்கு (CRIB) அறிக்கையிடப்படும். |
| **நிதிப் பரிவர்த்தனை அறிக்கையிடல்** | 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிப் பரிவர்த்தனை அறிக்கையிடல் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ், சந்தேகத்திற்கிடமான சட்டவிரோத நடவடிக்கை அல்லது குற்றச் செயல் தொடர்பான எந்தவொரு பரிவர்த்தனையும் நிதிப் புலனாய்வுப் பிரிவிற்கு (FIU ) அறிக்கையிடப்படும். |
| **செயலற்ற கணக்குகள்** | வைப்புத் தொகையின் உரிமையாளரினால் பத்து (10) ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதியில் எந்தவொரு வைப்பும் அல்லது பண மீளப்பெறுதலும் மேற்கொள்ளப்படாததுடன், நிறுவனத்துடனும் எவ்வித தொடர்பாடலும் மேற்கொள்ளப்படாத வைப்புகள் “செயலற்ற வைப்புகள்” (Dormant Deposits) என வகைப்படுத்தப்படும். இத்தகைய செயலற்ற வைப்புகள், 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 23 ஆம் பிரிவிற்கு அமைவாக இலங்கை மத்திய வங்கிக்கு (CBSL) அறிக்கையிடப்படும். |

## 6. வாடிக்கையாளர் முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கான நடைமுறை

**வாடிக்கையாளர் முறைப்பாடுகளுக்கான நிவாரணப் பொறிமுறை**

தபால் மூலம் முறைப்பாடுகளைச் சமர்ப்பித்தல்

சிரேஷ்ட முகாமையாளர் – செயற்பாடுகள்

CBC Finance PLC

இல. 200/01,

டொக்டர் என். எம். பெரேரா மாவத்தை,

கொழும்பு 08.

**டிஜிட்டல் மற்றும் தொடர்பாடல் வழிகள்**

அவசரத் தொலைபேசி இலக்கம்: +94 76 919 9791

மின்னஞ்சல்: info@cbcfinance.com

இணையத்தளம்: www.cbcfinance.com

நேரடியாக முறைப்பாடுகளைச் சமர்ப்பித்தல்

கிளைகளில் அமைக்கப்பட்டுள்ள **முறைப்பாட்டுப் பெட்டிகள்** அல்லது **கிளை முகாமையாளர்** ஊடாக வாடிக்கையாளர்கள் தமது முறைப்பாடுகளை நேரடியாகச் சமர்ப்பிக்கலாம்.

**வழங்கப்பட வேண்டிய தகவல்கள் :** முறைப்பாட்டைச் சமர்ப்பிக்கும் போது பின்வரும் தகவல்கள் கட்டாயமாக வழங்கப்பட வேண்டும்: வாடிக்கையாளரின் பெயர்; தேசிய அடையாள அட்டை இலக்கம் (NIC);கணக்கு இலக்கம்;கையடக்கத் தொலைபேசி இலக்கம்;மின்னஞ்சல் முகவரி (இருப்பின்);முறைப்பாட்டின் சுருக்கமான விளக்கம். (குறிப்பு: உரிய ஆதாரங்களுடன் சரிபார்க்க முடியாத அநாமதேய முறைப்பாடுகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.)

- **படிமுறை 1 – முறைப்பாடு கிடைக்கப்பெற்றதற்கான உறுதிப்படுத்தல்:** முறைப்பாடு கிடைக்கப்பெற்றமை தொடர்பில் மின்னஞ்சல் அல்லது தபால் மூலம் எழுத்துமூல உறுதிப்படுத்தல் வழங்கப்படும். பின்னர், முறைப்பாடு உரிய அதிகாரியிடம் மேலதிக பரிசீலனை மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்காக அனுப்பப்படும்.
- **படிமுறை 2 – விசாரணை மற்றும் பதிலளித்தல்:** CBC Finance நிறுவனம் முறைப்பாடு தொடர்பில் உரிய விசாரணையை மேற்கொண்டு, அதன் அடிப்படையில் உத்தியோகபூர்வமான தீர்மானத்தை வாடிக்கையாளருக்கு அறிவிக்கும்.
- **பத்து (10) வேலை நாட்களுக்குள்** பதிலளிக்க இயலாத பட்சத்தில், பதில் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படும் நீட்டிக்கப்பட்ட திகதி தொடர்பில் வாடிக்கையாளருக்கு அறிவிக்கப்படும்.
- **படிமுறை – நிதி ஒம்புட்ஸ்மனிடம் மேல்முறையீடு செய்தல்:** நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இறுதி பதில் அல்லது தீர்மானத்தில் வாடிக்கையாளர் திருப்தியடையாத பட்சத்தில், தமது முறைப்பாட்டை **நிதி ஒம்புட்ஸ்மன்** அவர்களிடம் மேலதிக பரிசீலனைக்காக முன்வைக்கலாம்.

**வரையறுக்கப்பட்ட இலங்கை நிதி ஒம்புட்ஸ்மன் (உத்தரவாத)**

முகவரி: இல. 01, பெதஸ்தா பிளேஸ், மிலாகிரிய, கொழும்பு 05. தொலைபேசி: 011 259 5624 / 011 259 5625, மின்னஞ்சல்: fosril@sltnet.lk